# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் நாள், திங்கள் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

## <u>நிகழ்ச்சி நிரல்</u>

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மொத்தம் 167.23 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள 65 வார்டுகளைக் கொண்ட நான்கு கோட்டங்களாக பிரிக்கப்பட்டு உள்ளது. இப்பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் வணிக வளாகங்களில் தற்பொழுது வீட்டு வாசலில் திடக்கழிவுகளைத் தரம் பிரித்துச் சேகரிக்கும் பணிக்கு 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் (2017 – 40 எண்ணிக்கை மற்றும் 2018 – 115 எண்ணிக்கை) 155 எண்ணிக்கை 2 CUM கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இவ்வாறு மேற்கண்ட துப்புரவுப் பணியினை முழுமையாக செயல்படுத்திட 1000 வீடுகளுக்கு ஒரு வாகனம் வீதம் 273396 வீடுகளுக்கு 249 வாகனம் தேவைப்படுகிறது என நான்கு கோட்ட உதவி ஆணையர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதன் படி கூடுதலாக தேவைப்படும் 94 எண்ணிக்கை இலகுரக வாகனங்கள் மற்றும் இரவு நேர துப்புரவுப் பணிக்காக 12 எண்ணிக்கை இலகுரக வாகனங்கள் என மொத்தம் 106 எண்ணிக்கை ரூ.662.35 இலட்சம் செலவினத்திலும், மேலும், இம்மாநகராட்சி பிரதான சாலை ஓரங்களில் தேங்கியுள்ள மண் துகள்களை நவீன வகை Road Sweeper இயந்திர வகை வாகனம் மூலம் அப்புறப்படுத்துவதற்கு தேவையான Road Sweeping Machine வாகனம் 2 எண்ணிக்கை ரூ.126.12 இலட்சம் செலவினத்திலும் புதிதாக வாங்குவதற்கு தனி அலுவலர் அவர்களின் மன்ற தீர்மன எண் 213 நாள் 10.06.2019ல் ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி வேண்டி 10.06.2019 அன்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்கண்டவாறு சமர்ப்பிக்கப்பட்ட கருத்துருவினை ஆராய்ந்து தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் நாள்:09.09.2019ல் சில விளக்கங்கள் கோரப்பட்டுள்ளது. அதற்கான உரிய விளக்கத்துடன் திருத்திய கருத்துருவினை மீள சமர்ப்பிக்க தெரிவித்துள்ளார்கள்.

தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்கள் கோரியுள்ள கூடுதல் தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கு கீழ்கண்டவாறு விளக்கம் அளிக்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>Ques</u>:** 1. The vehicles are required for solid waste management activities but the holistic plan of the solid waste management, Details of activities, (Primary collection, secondary transportation etc.), the vehicles required, vehicles already available to be mentioned.

- ✓ **<u>Reply:</u>** Holistic plan of the solid Waste Management for Tiruchirappalli City Corporation is submitted for perusal.

- ➢ **<u>Ques</u>:** 2. For the vehicles to be condemned, type of vehicles, Registration number, year of purchase, Number of kilometer run, present condition of vehicles are to be maintained.
  - ✓ **<u>Reply:</u>** To be condemned vehicles details is furnished and enclosed for perusal.

- **Ques:** 3. For all the households for primary collection activities, the Commissioner has proposed to purchase LCV which is not acceptable. As per the prevailing procedures 60% households are to be covered into BOV and 40% households to be covered with LCV.
  - ✓ **Reply:** As per Chief Engineer instruction revised proposal for the purchase of 220 nos of Battery Operated Vehicle instead of LCV's submitted for perusal.
- **Ques:** 4. For night shift work, commissioner, has proposed to purchase 12 number of LCV which is not required, the existing vehicles available for day work are idle after 5 PM and those vehicles can be used for the night sweeping works.
  - ✓ **Reply:** Chief Engineer instruction carried out for night sweeping works.

- **Ques: 5**. At present major water supply and UGSS schemes under implementation in Trichy Corporation. Hence, purchase / sanctioning of Road Sweeping can be considered at later stage.

**Reply:** Chief Engineer instruction carried out and proposal for road sweeping vehicle. Post poned till the completion of scheme.

தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் வழிகாட்டுதலின் படி தற்பொழுது 1200 வீடுகளுக்கு ஒரு வாகனம் வீதம் கணக்கீடு செய்ததில் கூடுதலாக தேவைப்படும் 73 எண்ணிக்கை 2 Cum புதிய இலகுரக டிப்பர் வாகங்களை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று ரூ. 437.49 இலட்சம் செலவினத்தில் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு திருத்திய கருத்துரு அனுப்ப அனுமதி வேண்டி தனி அலுவலர் மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்பு பணியில் திடக்கழிவுகளை வீட்டு வாசலில் தரம் பிரித்து வாங்கும் பணிக்கு தேவையான 2க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்கள் 73 எண்ணிக்கையினை உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.437.49 இலட்சத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று வாங்கிக்கொள்ள அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கு தேவையான நிதியினை சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு திருத்திய கருத்துரு அனுப்ப அனுமதி அளிக்கலாம்.

**இ5/643/2019(மையம்)**

**தீர்மானம் எண்.640 (பொருள்–1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ஸ்ரீரங்கம் கோட்டம் பகுதிகளில் வாக்கு சாடிவகளுக்கு தற்காலிக அடிப்படை வசதிகள் அமைத்து கொடுக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புதொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திருமதி. P. செல்வராணி திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

திருமதி. P. செல்வராணி ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ. 10126/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) பத்தி எண் 7ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | செலுத்திய இடம் | பிடித்தம் செய்யப் பட்டுள்ள தொகை விபரம் | தொகை (ரூபாயில்) | காலங்கடந்த நிலுவை வைப்பத் தொகை (2019–20) பதிவேட்டின் பக்க எண் & வரிசை எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | வார்டு எண்.12,13,16,17 மற்றும் 18க்குட்பட்ட வார்டுகளில் உள்ள பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள 44 வாக்குச்சாவடிகளில் வாக்காளர்கள் வரிசையில் நின்று வாக்களிக்க ஏதுவாக சவுக்கு தடுப்புகள், மற்றும் சாய்வு மேடை அமைத்தல், ஜெனரேட்டர் வசதிகள், பிளக்பாயிண்ட், குடிநீர் பேரல், மின்விசிறி, எமர்ஜென்ஸி வளிக்கு, 1லி குவளை, மேசை மற்றும் நாற்காலிகள், சவுக்கு தடுப்பகள், இரும்பு தகட்டிலான தடுப்புகள் போன்றவைகளை வாடகை அடிப்படையில் அமைக்கும் பணி<br>மதிப்பீடு ரூ.2.60 இலட்சம் | திருமதி. P. செல்வராணி | முதல் மற்றும் இறுதி பட்டியல் தொகை | 02.09.14 காப்புத் தொகை | 10126.00 | பகுதி -VII பக்கம் எண்- 27 வ.எண் -353 (மைய அலுவலகம்) |
| | மொத்தம் | | | | **10126.00** | |

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரருக்கு தணிக்கையில் “எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை’’ எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், பத்தி எண் 6ல் தெரிவிக்கப் பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் கடந்த 3 வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) அத்தொகையை ஒப்பந்ததாரர்களான திருமதி. P. செல்வராணி ஒப்பந்ததாரர், திருச்சி நிறுவனத்திற்கு ரூ.10,126 /–யை, திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/3353/2014(மையம்)**

**தீர்மானம் எண்.641 (பொருள்–2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ அபிஷேகபுரம் கோட்ட அலுவவகத்தில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மராமத்து பணி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புதொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு. T.செந்தில் நாதன் திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

திரு. T.செந்தில் நாதன் ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.**11494**/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை இம்மாநகராட்சி காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) கலம் எண் 7ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | செலுத்திய இடம் | பிடித்தம் செய்யப் பட்டுள்ள தொகை விபரம் | தொகை (ரூபாயில்) | காலங்கடந்த நிலுவை வைப்பத் தொகை (2019–20) பதிவேட்டின் பக்க எண் & வரிசை எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | வார்டு எண்.57 சோழராஜ புரம் ஒருங்கிணைந்த சுகாதார வளாகத்தில் மராமத்து பணி<br>மதிப்பீடு ரூ.5.00 இலட்சம்<br>இ7/7992/2013 (மையம்) | திரு. T.செந்தில் நாதன் | முதல் மற்றும் பகுதி பட்டியல் தொகை | 21.03.14 காப்புத் தொகை | 11494.00 | பகுதி -VI பக்கம் எண்- 62 வ.எண் -767 (மைய அலுவலகம்) |
| **மொத்தம்** | | | | | **11494.00** | |

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரருக்கு தணிக்கையில் “எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை’’ எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், கலம் எண் 6ல் தெரிவிக்கப் பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் கடந்த 3 வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) அத்தொகையை ஒப்பந்ததாரர் திரு. T.செந்தில் நாதன், திருச்சி என்பவருக்கு ரூ.**11,494** /–யை, திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/9034/2017(மையம்)**
**தீர்மானம் எண்.642 (பொருள்–3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**
**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டம், வார்டு எண்.44, கலையரங்கம் புதிய திருமண மண்டபத்தில் நீர்நிலைகளில் ஏற்படுத்தும் விபத்துகள், வெள்ளம், புயல், தீ விபத்து உள்ளிட்ட இயற்கை பேரழிவுகளிலிருந்து தங்களை பாதுகாத்து கொள்வது குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையில் உருவாக்கிடும் வகையில் **05.11.2019** அன்று **விழிப்புணர்வு முகாம்** நடத்த தேவையான தற்காலிக Stall, நாற்காலி, மேசை, ஒலிபெருக்கி, மின் விசிறி, விளக்குகள், விளம்பர பலகைகள், LED தொலைக்காட்சிகள் மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.**7.35** இலட்சத்திற்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி **1994** ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டப்பிரிவு **15**ன் கீழ் மதிப்பீட்டின் விலையை விட **0.09** சதவீதம் குறைவான விலை விகிதத்தில் விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே. ராமசாமி ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ1/11085/19(மையம்)**

**தீர்மானம் எண்.643 (பொருள்–4) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 5**

இம்மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியில் பயன்படுத்தப்பட்ட 1.1 க.மீ, 2.5 க.மீ மற்றும் 4 க.மீ கொள்ளளவுள்ள பழுதடைந்த குப்பைத்தொட்டிகள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதை கழிவு செய்து பொது ஏலத்தில் விற்பனை செய்ய 01.07.2019ம் அன்று தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் அனுமதி அளித்துள்ளதன் படி முதன்முறையாக 28.08.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏல விற்பனை நடத்தியதில் 2 நபர்கள் கலந்து கொண்டனர். இருவரும் ஏல கேள்வி ஏதும் கோரவில்லை. மேலும், குப்பைத்தொட்டிகளுக்கு நிர்ணயித்த விலை, இன்றைய சந்தை மதிப்பை காட்டிலும் கூடுதலாக உள்ளது என தெரிவித்தனர்.

பின்னர், 19.09.2019ம் தேதிய தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதியில் ஏலம் விடப்படும் நிலையில் உள்ள மேற்கண்ட பழுதடைந்த குப்பைத்தொட்டிகளுக்கு இன்றைய சந்தை மதிப்பை விலைப்புள்ளி பெற்று, விலை நிர்ணயம் செய்து மறு ஏலம் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது. எனவே, இத்துறை சார்ந்த நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகள் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| Sl No | Company Name | Amount / Kg |
|---|---|---|
| 1 | M/s Syed Sikkanther Traders, Trichy. | Rs.12/- |
| 2 | M/s Bismi Steels, Cuddalore. | Rs.13/- |
| 3 | M/s Jayaraj & Co, Trichy. | Rs.13/- |

மேற்கண்ட விவரப்படி M/s Bismi Steels மற்றும் M/s Jayaraj & Co நிறுவனங்கள் கிலோ ஒன்றிற்கு ரூ.13/– என்று அளித்துள்ள விலை விகிதத்தினை ஏற்று பழுதடைந்த குப்பைத் தொட்டிகளுக்கு கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு மதிப்பீடு தயாரித்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| Sl No | Material Name | Kg per Bin | No of Bins | Total Kg (3 x 4) | Rupees per Kg | Total Amount (5 x 6) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | Condemned 1.1 cum bin | 95 | 510 Nos | 48450 | Rs.13/- | 629850 |
| 2 | Condemned 2.5 cum bin | 140 | 187 Nos | 26180 | Rs.13/- | 340340 |
| 3 | Condemned 4 cum bin | 295 | 296 Nos | 87320 | Rs.13/- | 1135160 |
| **Total** | | | **993 Nos** | **161950** | **Rs.13/-** | **2105350** |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி 993 எண்ணிக்கை பழுதடைந்த நிலையில் உள்ள குப்பைத்தொட்டிகளை ரூ. 2105350/- மதிப்பீட்டு விலையில் ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலத்தில் விற்பனை செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்க அனுமதி வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு மன்றப் பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட கழிவடைந்த நிலையில் உள்ள குப்பைத் தொட்டிகளை ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலத்தில் ரூ.21,05,350/- மதிப்பீட்டு தொகைக்கு குறையாமல் விற்பனை செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கலாம்.

**கோப்பு எண்.இ5/3205/2019/(மை)**

**தீர்மானம் எண்.644 (பொருள்–5) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – சு. சிவசுப்ரமணியன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**